பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 09 திங்கட்கிழமை 25.08.2025 கதிர் 288

## இது ரகசியம் அல்ல!

ரணிலை 4 நாட்களாக விளக்கமறியலில் வைத்ததுதான் இலங்கை முழுவதும் கதை. இலங்கை தாண்டி பல நாடுகளில் இருந்தும் இது பற்றிப் ☞2

## அரச மருத்துவர்கள் சங்கம் போராட்டத்தை கைவிட்டது

அரசமருத்துவஅதிகாரிகள்சங்கத்தால்இன்று முதல்தொடங்கப்படுவதாகஅறிவிக்கப்பட்டிருந்த போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

சுகாதாரத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவுன்சங்கம்நேற்றுநடத்தியபேச்சின் பின்னர் அறிவிக்கப்பட்ட போராட்டத்தைக் கைவிடுவதாகச் சங்கம் தெரிவித்துள்ளது.

வைத்தியர்களின்இடம்மாற்றசெயல்முறை தொடர்பான பிரச்சினைகள் உட்பட பல கேகாரிக்கைகளை முன்வைத்து இன்று காலை 8 மணி முதல் இலங்கை ☞8

## ஜனநாயகம் மீதான திட்டமிட்ட தாக்குதலே ரணிலின் கைது

### சந்திரிக்கா அம்மையாரும் சாடல்

முன்னாள்அரசுத்தலைவர் ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டமை இந்தநாட்டின்ஜனநாயகமதிப்பின்மீது திட்டமிட்ட வகையில் மேற்கொண்ட தாக்குதலாகும். ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு சகல அரசியல் தலைவர்களும் எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும் என முன்னாள் அரசுத் தலைவர் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க வலியுறுத்தியுள்ளார்.

முன்னாள்அரசுத்தலைவர் ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டமை தொடர்பில் விசேட ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனைத் தெரிவித்துள்ளார். அதில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: ☞2

## சட்டத்தின் முன்பாக அனைவரும் சமம் என்பது எதிர்க்கட்சியினருக்கு மட்டுமே

### தயாசிறி எம்.பி. குற்றச்சாட்டு

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதை எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களுக்கு மாத்திரம் அரசுத் தலைவர் வரையறுத்துள்ளார். ஜேவிபி யூடியூபரான சுதத என்பவர் நீதித்துறையில் செயற்பாடுகளில் தலையீடு செய்துள்ளார். இது நீதிவான்களுக்கு பிரயோகிக்கும் மறைமுக அழுத்தமாகும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற எதிர்க்கட்சிகளின் செய்தியாளர்கள் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். ☞8

# 40 ஆண்டுகளுக்கு முன்பே ரணில் கைது செய்யப்பட்டிருக்கவேண்டும்

### விமர்சனங்களுக்கு அமைச்சர் பிமல் பதிலடி

**முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை 40 ஆண்டுகளுக்கு முன்னரே கைது செய்திருக்கவேண்டும் என்று தெரிவித்தார் அமைச்சர் பிமல் ரத்நாயக்க. ரணிலின் கைது மீது தெரிவிக்கப்படும் கடும் விமர்சனங்களுக்கான பதிலாக அவர் வவுனியாவில் அவர் இதனைத் தெரிவித்தார்.**

**“முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை யூலைக் கலவரம், யாழ் நூலக எரிப்பு, பட்டலத்த வதைமுகாம்போன்றசம்பவங்கள் இடம்பெற்றகாலப்பகுதியிலேயே கைது செய்திருக்கவேண்டும். சட்டம்அனைவருக்கும்சமமானது“ என்றார்நெடுஞ்சாலைகள்மற்றும் கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சரான பிமல்ரத்நாயக்க.**

**வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின்** ☞2



## அரசியல்வாதி ஒருவரின் பயணம் சிறைசெல்லாது முழுமையடையாது

### ரணிலின் கைது தொடர்பில் மைத்திரி கருத்து

அரசியல்வாதி ஒருவர் சிறைக்கு செல்லாவிடின் அவரது அரசியல் பயணம் முழுமையடையாது. நாட்டின் அரசமைப்புக்கு அமைய ஆளும்தரப்பு செயற்பட வேண்டும் என முன்னாள் அரசுத் தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பில்நேற்றுநடைபெற்றஎதிர்க்கட்சிகளின் செய்தியாளர்கள் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது அரசியல்கொள்கைக்குமத்தியில்நாங்கள் துயரமடைந்துள்ளோம்.சிறைசென்றுள்ளோம்.பல இன்னல்களுக்கு முகங்கொடுத்துள் ☞8

## ரணிலின் கைது நடவடிக்கை அரசியல் பழிவாங்கலேதான்

### மனோ கணேசனும் சீற்றம்

முன்னாள் அரசுத்தலைவர் ரணில் விக்கிரமசிங்கமீதுமுன்வைக்கப்பட்டுள்ள பட்டலந்த விவகாரம் மற்றும் பிணை முறி மோசடி குற்றச்சாட்டு தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொண்டால் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைய போவதில்லை. அரசியல் பழிவாங்களுக்காகவே ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டுள்ளார் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற எதிர்க்கட்சிகளின் செய்தியாளர்கள் சந்திப்பில்இதனைத்தெரிவித்தார். ☞2

## பொதுச் சொத்துக்களுக்குத் தீவைத்து அழித்த ஜேவிபி ரணிலை கைது செய்வது கேலிக்கூத்து

### சம்பிக்க ரணவக்க சீற்றம்

பொதுச் சொத்துக்களை தீவைத்து இல்லா தொழித்த பொதுச்சொத்து சட்டத்தின் பிரகாரம் முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை கைது செய்துள்ளமை வரலாற்றில் கேலிக்கூத்து.அரசியலமைப்புடனான சர்வாதிகாரத்தை தோற்கடிப்போம் என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில்நேற்றுநடைபெற்றஎதிர்க்கட்சிகளின் செய்தியாளர்கள் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்த ஆளும்தரப்பின் அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் மீதும் பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இருப்பினும் அவர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. குறைந்தப்பட்சம் அவர்களிடமிருந்து வாக்குமூலம்கூட பெற்றுக்கொள்ளப்படவில்லை.

சுங்கத்தில் இருந்து கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமை தொடர்பில் நிதியமைச்சர் என்ற அடிப்படையில் அரசுத் தலைவர் மீதும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இவ்விடயம் தொடர்பில் விசாரிக்க வேண்டும் என்று அரசுத் தலைவரால் நியமிக்கப்பட்ட கணக்காய்வு குழு பரிந்துரைத்துள்ளது.

சட்டத்தின் முன்னிலையில் அனைவரும் சமம் என்பதை குறிப்பிட்டுக் கொண்டு நேரடியாக அரசியல் பழிவாங்கல்கள் இடம்பெறுவதை அவதானிக்க முடிகிறது. அரசுத் தலைவர் ஆட்சிக்கு வந்ததில் இருந்து பல வெளிநாட்டு பயணங்களில் ஈடுபட்டுள்ளார். அவருக்கு அழைப்பு விடுத்த நிறுவனங்களுக்கு வரிச்சலுகை வழங்கப்பட்டுள்ளன. அரசுத் தலைவர் மற்றும் பிரதமர் ஆகியோரின் தனிப்பட்ட பயணங்களுக்கு அரச நிதி பயன்படுத்தப்படுவதில்லையா?

பொதுச்சொத்துக்களைதீவைத்துஇல்லாதொழித்த ஜேவிபிபொதுச்சொத்துசட்டத்தின்பிரகாரம்முன்னாள் அரசுத்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை கைது செய்துள்ளமை வரலாற்றில் கேலிக்கூத்தானதொரு செயற்பாடாகும் - என்றார்.

## ஆளும்தரப்பின் சர்வாதிகாரத்திற்கு எதிராக அனைவரும் திரள்வோம்

### பொது ஜன பெரமுன அறைகூவல்

முன்னாள் அரசுத்தலைவர் ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டதை வன்மையாக கண்டிக்கிறோம். முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நேர்ந்த கதி நாளை பிறிதொருவருக்கு ஏற்படலாம். ஆகவே சர்வாதிகாரத்துக்கு எதிராக அனைவரும்ஒன்றுபடவேண்டும் ☞8

## மக்கள் காட்டிய கடும் எதிர்ப்பினால் தபால் ஊழியர் போராட்டம் முடிவு

### அமைச்சர் நளிந்த அறிவிப்பு

தபால் சேவையில் கைவிரல் ரேகை பதிவு ஸ்கேனர் பொருத்தல் மற்றும் மேலதிக நேர கொடுப்பனவில் மாற்றமில்லை என்ற அரசாங்கத்தின் உறுதியான இரண்டு கோரிக்கைக்கு இணக்கம் தெரிவித்து தபால் சேவையாளர்கள் நேற்று மாலையுடன் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை கைவிட்டனர். நியாயமற்ற பணிப்புறக்கணிப்பு போராட்டத்துக்கு ஒட்டுமொத்த மக்களும் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியமை வரவேற்கத்தக்கது. கொழும்பு மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் இன்று முதல் ☞8

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

பேசுகிறார்கள். குற்றச்சாட்டுக்களே இல்லாமல் பத்தாண்டுகளுக்கும் மேலாக தமிழர்கள் சிறைகளில் அடைக்கப்பட்டு வாடிய இந்த நாட்டில்தான் அது பற்றி அலட்டிக்கொள்ளாதவர்கள்தான், முறையாகக் குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு நீதிவான் மூலம் ஒருவர் 4 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டது குறித்து கொதித்துக் கொந்தளிக்கிறார்கள். இதனால்தான் இலங்கைய ஆசியாவின் அதிசயமாக இன்னும் தொடர்கிறது. அதுவும் விளக்கமறியலலில்வைக்கப்பட்ட 4 நாள்களில் ஒருஇரவைக்கூடசிறைச்சாலையில்கழிக்காத ஒருமனிதருக்காகவே இத்தனை குரல்களும்.

ரணில் விக்கிரமசிங்கவைக் கைது செய்தது குறித்து இலங்கைக்-குள் இருந்த மட்டுமல்ல வெளிநாடுகளில் இருந்தும் கண்டனக்குரல்கள்கேட்கின்றன. இந்தியாவில் இருந்து சசி தாகூர் ரணிலுக்காகக் குரல் கொடுத்துள்ளார். இந்திய அரசியலில் பலமான மனிதராகவும் இந்திய காங்கிரஸ் கட்சியின் உயர்சபை உறுப்பினராகவும் நாடாளுமன்ற உறுப்பினராகவும் விளங்கும் சசி தாகூர், ரணிலின்கைதுக்கானகாரணங்களை"அற்பக் குற்றச்சாட்டுக்கள்" என்று வர்ணித்துள்ளார்.

''இலங்கையின் முன்னாள் அதிபர் ரணில் விக்ரமசிங்கேவை, மேலோட்டமாகப் பார்த்தால், அற்பமான குற்றச்சாட்டுகளின் பேரில் தடுத்து வைத்திருப்பது குறித்து கவலை கொள்கிறேன். அவரது உடல்நலப் பிரச்சினைகள் காரணமாக அவர் ஏற்கனவே சிறை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். இது அவர்களின் உள்நாட்டுவிவகாரம்என்பதைமுழுமையாக மதிக்கும் அதேவேளையில், பழிவாங்கும் அரசியலைக் கைவிட்டு, முன்னாள் அதிபர் பல தசாப்தங்களாக தேசத்திற்குச் சேவை செய்த பிறகு, அவருக்குத் தகுதியான மரியாதை மற்றும் கண்ணியத்துடன் நடத்த வேண்டும் என்று இலங்கை ஆளும்தரப்பிடம் கேட்டுக்கொள்கிறேன்'' என்று அவர் தெரிவித்துள்ளார்.

இவர் தவிர ரணிலுக்காக உருகிக் குரல் கொடுத்துள்ள மற்றொருவர் எரிக் சொல்ஹெய்ம் என்கிற நோர்வே அரசியல்வாதி. இவர் ரணிலுக்கும் தமிழீழ வி-டுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்களின் மூலம் இலங்கையில் நன்கு அறியப்பட்டவர். ரணிலைத் தயவுசெய்து உடனடியாக விடுதலை செய்யுங்கள் என்று உருக்கமாக வேண்டுகோள்விடுத்துள்ளார். அதுமட்டுமல்லரணில்மீதானகுற்றச்சாட்டுக்கள் மேற்கு நாடுகளில் ஒரு குற்றமாகவே பார்க்கப்படுவதில்லை என்று வேறு கருத்துச் சொல்லியிருக்கிறார். அவர்ரணிலுக்காகஇன்று உருகுவதைப் பார்க்கும்போது இவரையா புலிகளின் ஆதரவாளர் என்றார்கள் என்று ஆச்சரியமாக இருக்கின்றது.

சொல்ஹெய்ம்தான் ரணில் - பிரபாகரன் அமைதி உடன்படிக்கையின் பின்னால் பணியாற்றிய வெளிநாட்டு அனுசரணையாளர். அந்த உடன்படிக்கைக்காக தலைவர் பிரபாகரனை நேரில் சந்தித்த வெளிநாட்டவரும்கூட. ஒரு கட்டத்தில் அவர் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகவே செயற்படுகின்றார் என்றுகூறி ராஜபக்சக்கள் அவரைஅமைதிப்பேச்சுக்கானஅனுசரணைப் பணியிலிருந்து அகற்றினார்கள். அவர் ரணிலுக்காக உருகுவதைப் பார்க்கும்போது, முன்னைய சம்பவங்களை நினைத்துச் சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை.

இதற்கிடையே, ரணில் கைதுசெய்யப்பட்ட உடனேயே அவரது லண்டன் பயணம் உத்தியோகபூர்வமானதுதான் என்று ஒரு ஆவணம் ஐக்கிய தேசியக் கட்சியால் வெளியிடப்பட்டது. அது லண்டன் பல்கலைக்கழகம் ஒன்று ரணிலைத் தனது நிகழ்வில் கலந்துகொள்ள அழைப்பு விடுத்த அழைப்பிதழ். ரணிலுக்குப் பிணை வழங்கக் கோரிய சட்டவாதிகளால் அந்த ஆவணம் நீதிமன்றத்திலும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இப்போது அந்த அழைப்பிதழ் தொடர்பிலும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் (சிஐடி) விசாரணைகளைத் தொடங்கியிருக்கிறதாம்.

லண்டன் வோல்வர்ஹாம்டன் பல்கலைக்கழகத்தில் இருந்து பட்டமளிப்பு விழாவிற்காக ரணிலுக்கு அனுப்பப்பட்ட அந்த அழைப்பிதழ் உண்மையிலேயே முன்னரே அனுப்பப்பட்டதா அல்லது ரணில் விசாரணை வளையத்திற்குள் கொண்டுவரப்பட்ட பின்னர் அவசர அவசரமாகச் சோடிக்கப்பட்டதா என்பது தொடர்பிலேயே விசாரணை நடக்கிறதாம்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் ரணில் மீதான விசாரணையைத் தொடங்கி 3 மாதங்களான போதும் முன்வைக்கப்படாத இந்த அழைப்பிதழ் இப்போது திடீரென வெளியே வந்திருப்பதே சந்தேகத்தை கிளறியிருப்பதாகஅதிகாரிகள்தெரிவிக்கின்றனர். துரதிர்ஸ்டவசமாக ரணிலை பட்டமளிப்பு விழாவிற்குஅழைத்துநின்றபேராசிரியர்வேறு உயிரிழந்துவிட்டார். இனிமேல் புலனாய்வு அதிகாரிகள் இந்த அழைப்பிதழ் பற்றி என்ன உண்மையைக் கண்டறிகிறார்கள் என்று பார்ப்போம்.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## 40 ஆண்டுகளுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெதரிவித்ததாவது:

ரணில் விக்கிரமசிங்கவின் கைது நடவடிக்கையானது அரசியல் பழி வாங்கல் அல்ல. நாட்டு மக்கள் எமக்கு வழங்கிய ஆணைக்கு அமைய நாங்கள் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டும் என்ற அடிப்படையிலேயே அது இடம்பெற்றது.

இதுவரை காலமும் இந்த நாட்டில் சாதாரண மக்களுக்கு மாத்திரமே சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. ஆனால் எமது ஆட்சியில் யார் எவர் என்ற தராதரம் பாராது, அனைவருக்கும் சமமான வகையில் சட்டம் அமுல்படுத்தப்படுகின்றது.

தற்போதுஇதற்குஎதிர்ப்பினைதெரிவிக்கும் வகையில் குப்பைகள் அனைத்தும் ஒன்று சேர்ந்துள்ளன. ஆனால் அவர்களால் ஆளும்தரப்பை ஒன்றும் செய்ய முடியாது. தேர்தலில்நின்றுவெற்றிபெறமுடியாதவர்கள், மக்களால் தோற்கடிக்கப்பட்டவர்களே ஒன்று சேர்ந்துள்ளனர். மைத்திரி, நிமால் சிறிபால டி சில்வா, மனோகணேசன் இவர்கள் எல்லாம் நிராகரிக்கப்பட்டவர்கள். இவர்கள் ஒன்று சேர்ந்து குதிப்பதால் எதுவும் நடந்து விடாது.

ரணிலின் காலத்திலேயே யாழ் நூலகம் எரியூட்டப்பட்டது, கறுப்பு யூலை கலவரம் இடம்பெற்றது. அந்த கலவரத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் வவுனியா, செட்டிகுளம், வாரிக்குட்டியூர் பகுதிகளிற்கு இடம்பெயர்ந்திருந்தார்கள். அத்துடன்பட்டலந்த அறிக்கை தொடர்பாக அனைவருக்கும் தெரியும். அதற்கும் ரணில் விக்கிரமசிங்க பதில்சொல்ல வேண்டும்.

அந்தக் காலப்பகுதியில்தான் அவரைக் கைது செய்திருக்க வேண்டும். இது சின்ன விடயம்தான். ஆனால் எதிர்காலத்தில் மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணை முறி ஊழல் தொடர்பாக மீண்டும் விசாரணைகள் முன்னெடுக்கப்படும்.

அத்துடன் ஊழல்வாதிகள், அரசபணத்தை மோசடி செய்தவர்கள் மீது தொடர்ச்சியாகச் சட்டம் பாயும். பொலிசார் சுதந்திரமான வகையில் தங்களது கடமைகளை செய்வதற்கான சூழல் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளது. நாங்கள் ஆளும்தரப்பு என்றவகையில் பொலிசாருக்கு எந்தவிதமான அழுத்தங்களையும் வழங்கவில்லை. என்றார்.

(100)

## ரணிலின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களை பழிவாங்குவது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மீது பட்டலந்த விவகாரம், பிணைமுறி மோசடி உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களை முன்வைத்து, அந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிட்டுக் கொண்டுதான் தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்தது. இந்த வாக்குறுதிகளை நிறைவேற்றினால் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைய போவதில்லை.

ரணில் விக்கிரமசிங்க மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்தவர்கள் பலர் இச்சந்தர்ப்பத்தில் இங்குள்ளார்கள். அதுவொன்றும் பிரச்சினையில்லை. அரசுத் தலைவர் பதவி மற்றும் தனிப்பட்ட பயணம் தொடர்பான விவாதம் ஆரம்பித்துள்ளது. இவ்விடயம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் விரிவாக கலந்துரையாடலாம். குறுகிய அரசியல் பழிவாங்கலை ஆளும்தரப்பு உடன் நிறுத்தவேண்டும் என்றார்.

# "சர்வாதிகாரத்தை தோற்கடிப்போம்" எதிர்க் கட்சிகள் சேர்ந்து கண்டனம்

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டமைப்பு எதிர்ப்பு தெரிவித்து சகல எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து 'அரசமைப்பு சர்வாதிகாரத்தை தோற்கடிப்போம்' என்ற தொனிப்பொருளில் ஆளும்தரப்பின் சர்வாதிகார செயற்பாட்டுக்கு கடும் கண்டனத்தை வெளியிட்டன.

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்று குறிப்பிட்டுக் கொண்டு ஆளும்தரப்பு அரசியல் பழிவாங்கலை மாத்திரம் முன்னிலைப்படுத்தி செயற்படுகிறது. இன்று ரணிலுக்கு நேர்ந்த கதி நாளை பிறிதொருவருக்கு ஏற்படலாம். ஆகவே ஜனநாயகத்தையும், அரசமைப்பைப் பாதுகாக்கவும் சகல தரப்பினரும் அரசியல், கட்சி பேதமின்றி ஒன்றிணையவேண்டும் என்று எதிர்கட்சிகளின் தலைவர்கள் கூட்டாக வலியுறுத்தியதுடன், முன்னாள் அரசுத் தலைவர் ரணில்விக்கிரமசிங்கவை பாதுகாக்க அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் குறிப்பிட்டனர்.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புதெரிவிக்கும்வண்ணம்எதிர்க்கட்சிகளின் தலைவர்கள், பிரதிநிதிகள் கூட்டாக ஒன்றிணைந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசினர்.

முன்னாள் அரசுத் தலைவர் மைத்திரிபால சிறிசேன, முன்னாள் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கனேசன், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம், தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரம், ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் பாட்டலி சம்பிக்க, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அதுகோரல, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் ஆகியோரும்,

நாடாளுமன்ற உறுப்பினர்களான காவிந்த ஜயவர்தன, தயாசிறி ஜயசேகர, ரவி கருணாநாயக்க, நாமல் ராஜபக்ஷ ஆகியோரும், முன்னாள் அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்த, ஜி.எல்.பீரிஸ், துமிந்த திசாநாயக்க நிமல் சிறிபால டி சில்வா, டிரான் அலஸ், மஹிந்த அமரவீர, பவித்ரா வன்னியராட்சி, அகில விராஜ் காரியவசம், உட்பட பலர் கலந்துக் கொண்டனர்.

இந்தசெய்தியாளர்கள்சந்திப்பில்முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ச ஆகியோர் கலந்துக்கொள்வதாக அறிவித்திருந்தபோதும் அவ்விருவரும் கலந்துக்கொள்ளவில்லை. முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டமை தொடர்பில் முன்னாள் அரசுத் தலைவர் சந்திரிக்கா பண்டாரநாயக்க வெளியிட்ட அறிக்கையை ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் தலதா அதுகோரல ஊடக சந்திப்பின் போது வாசித்தார்.

செய்தியாளர்கள் சந்திப்பைத் தொடக்கி வைத்துஉரையாற்றியமுன்னாள்அரசுத்தலைவர் மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டமை தொடர்பில் நான் கவலையை தெரிவித்துக்கொள்கின்றேன் என்றார். எமது நாடுதற்போது செல்லும் பயணத்தை பார்க்கும் போது நாட்டின் ஜனநாயகம் தொடர்பிலான பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. ஜனநாயகம் என்பது இந்த நாட்டில் இரத்தத்துடன் கலந்த விடயமாக உள்ளது என்றும் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து உரையாற்றிய முன்னாள் அமைச்சர் பீரிஸ முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் கைது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. அரசுத் தலைவர் என்ற வகையில் கிடைத்த அழைப்புக்கமைய நிகழ்வொன்றில் கலந்துகொண்டிருந்த நிலையிலேயே அது தொடர்பில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு அவர் கைது செய்யப்பட்டுள்ளார். அது தொடர்பான பொலிஸ் விசாரணைகள் முழுமையடையாமல் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஆளும்தரப்பிற்கு எதிராக ஏதேனும் கருத்துக்களை வெளியிட்டால் கருத்து வெளியிடுபவர்களை அச்சுறுத்தி மௌனமாக்குவதையே காண்கின்றோம். இதனால் ஜனநாயக நிறுவனங்கள் முழுமையாக இல்லாமல் செய்யப்படுகின்றது. இங்குஎமதுஉரிமைகள்முக்கியமானவையே. இதனை தோற்கடிக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்றார்.

இதனைத் தொடர்ந்து உரையாற்றிய ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம், நாட்டில் சட்டத்தின் ஆட்சி அமுல்படுத்தப்படவேண்டும். சட்டத்தின் முன் அனைவரும் சமமாக மதிக்கப்பட வேண்டும் என்பதில் எவ்வித மாறுப்பட்ட கருத்தும் கிடையாது. ஆனால்நடைமுறையில்சட்டத்தின் ஆட்சி முறையாக செயற்படுத்தப்படுகிறதா என்பதில் பெரும் சந்தேகம் காணப்படுகிறது. நீதிமன்றத்தின் தீர்மானத்தை யூடியூபர்முன்னதாகவேஅறிவிக்கும்நிலைமை இன்று காணப்படுகிறது. இவ்வாறான போக்கு ஜனநாயக விரோதமானது என்றார்.

ஊடக சந்திப்பில் உரையாற்றிய அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்றஉறுப்பினர்கள். ஆளும்தரப்பின் சர்வாதிகாரத்துக்கு அரசியல் கட்சி பேதமின்றி அனைவரும் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும். ஜனநாயகத்தை பாதுகாக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுகின்றனர் என்றும் தெரிவித்தார்.

## மக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைவிரல் ரேகை பதிவு ஸ்கேனர் முறைமை அமுல்படுத்தப்படும் என சுகாதாரம் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்ததபால்சேவைதொழிற்சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும், வெகுஜன ஊடகத்துறை அமைச்சருக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று அமைச்சின் பணியிடத்தில் இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடல் தொடர்பில் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மேலும் தெரிவித்ததாவது:

தபால் சேவையாளர்கள் முன்வைத்த கோரிக்கைகளில் 17 கோரிக்கைகளை நிறைவேற்றநாங்கள்இணக்கம்தெரிவித்தோம். தபால் சேவையில் கைவிரல் ரேகை பதிவு ஸ்கேனர்பொருத்தல்மற்றும்அங்கீகரிக்கப்பட்ட மேலதிக நேர கொடுப்பனவை அதிகரிக்க முடியாது என்பதில் உறுதியாக இருந்தோம்.

இவ்விரு கோரிக்கைகளுக்கும் எதிர்ப்பு தெரிவித்துதபால்தொழிற்சங்கத்தினர் கடந்த 6 நாட்களாக பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இவர்கள் நியாயமற்ற கோரிக்கைகளுக்காக பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டார்கள் என்பதை நாட்டு மக்கள் நன்கு விளங்கிக் கொண்டு அதற்கு கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள்.

தபால் சேவையில் கைவிரல் ரேகை பதிவு ஸ்கேனர் பொருத்தப்படும் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட மேலதிக நேர கொடுப்பனவை அதிகரிக்க முடியாது என்பதில் உறுதியாக இருந்தோம். இவ்விரு விடயங்களிலும் மாற்றமில்லை என்பதை தொழிற்சங்கங்களுக்கு அறிவித்தோம். இதனை தவிர்த்து ஏனைய கோரிக்கைகளை பற்றி பேசுவதாக இருந்தால் மாத்திரம் கலந்துரையாடலாம்என்றுகுறிப்பிட்டிருந்தோம். இதற்கமைய தொழிற்சங்கத்தினர் பேச்சு நடத்த இணக்கம் தெரிவித்தனர்.

பேச்சின்போது தபால் சேவையாளர்கள் முன்வைத்த 17 கோரிக்கைகளையும் எதிர்வரும் மாதம் முதல் செயற்படுத்த இணக்கம் தெரிவித்தோம். தபால் சேவையில் கைவிரல் ரேகை பதிவு ஸ்கேனர் பொருத்தல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட மேலதிக நேர கொடுப்பனவை மேலும் அதிகரிக்க முடியாது என்ற நிபந்தனையை தொழிற்சங்கத்தினர் ஏற்றுக்கொண்டனர்.

இதற்கமைய இன்று (நேற்று) மாலை 4 மணிமுதல் பணிப்புறக்கணிப்பை கைவிட்டு கடமையில் ஈடுபட தொழிற்சங்கத்தினர் இணக்கம் தெரிவித்தனர். ஆகவே பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்ட தபால் சேவையாளர்களுக்கு எதிராக எடுப்பதற்கு தீர்மானித்திருந்த நிறுவன மட்டத்திலான நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டன.

எதிர்ப்பை வெளிப்படுத்தியமை வரவேற்கத்தக்கது. கொழும்பு மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் இன்று முதல் கைவிரல் ரேகை பதிவு ஸ்கேனர் முறைமை அமுல்படுத்தப்படும். அரச ஊழியர்கள் தமது கடமைக்குபொறுப்புக்கூறவேண்டும்என்பதில் எவ்வித மாற்றமுமில்லை என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# பயங்கரவாதச் சட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் அனைவருக்கும் இழப்பீடு தேவை

## நல்லாட்சிக்கான தேசிய முன்னணி தெரிவிப்பு

(அய்யாஸ் )

பயங்கரவாதத் தடுப்புச் சட்டமானது (PTA) உடனடியாக நீக்கப்பட வேண்டும். இச்சட்டத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்கள் அனைவருக்கும் ஆளும்தரப்பு இழப்பீடு வழங்கவேண்டும் என்று திருகோணமலை மாவட்ட நல்லாட்சிக்கான தேசிய முன்னணி (N.F.G.G) கட்சியின் மாவட்டப் பிரதிஅமைப்பாளரும் கிண்ணியா பிரதேச சபை உறுப்பினருமான அப்துல் ஹசன் தெரிவித்தார்.

கிண்ணியாவில் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்தபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாத தடுப்புச் சட்டமானது( PTA ) இலங்கையில் அவசரமாக நீக்கப்படவேண்டும். என்பிபி ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் இச்சட்டத்தை நீக்குவதாக கூறியது. ஆனால் ஆட்சிக்கு வந்த பின்னரும் அச்சட்டத்தை இன்னும் நீக்கவில்லை. இது சிறுபான்மை சமூகத்தினருக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இச்சட்டம் 1978 ஆம் ஆண்டு தற்காலிக சட்டமாகவும், 1979ஆம் ஆண்டு நிரந்தரச் சட்டமாகவும் ஆக்கப்பட்டது. இச்சட்டத்தினை இல்லாமல் செய்ய வேண்டும் என்ற கருத்தினை உள்ளூர் மனித உரிமை அமைப்புகளும், சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் மிக வலுவாக வலியுறுத்தி வருகின்றார்கள்.

தற்போது ஆட்சியில் இருக்கின்ற ஆளும்தரப்புக்கூட ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் குறித்த சட்டத்தினை இல்லாமல் செய்ய வேண்டும் இது நாட்டிற்கு ஆபத்தானது என்ற கருத்தினை தெரிவித்துக் கொண்டிருந்தார்கள். ஆகவே, இவர்கள் சொல்வதைப் போன்று இந்த சட்டத்தை ஆளும்தரப்பு இல்லாமல் செய்ய வேண்டும்

இந்தச் சட்டமானது தமிழ் பேசுகின்ற இனத்திற்கு எதிராக மிக கடுமையாக பிரயோகிக்கப்பட்டிருப்பதையும், அதன் மூலம் சொல்லெனாத் துயரங்களை நம் மக்களில் சிலர் அனுபவித்திருப்பதையும் நாங்கள் பார்க்கின்றோம்.

அண்மையில்கூட இரண்டு முஸ்லிம் இளைஞர்கள் குறிப்பாக ருஷ்டி மற்றும் மாவணல்லையை சேர்ந்த சுஹைல் ஆகியோர் இச்சட்டத்தின் மூலம் கடுமையாக பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

இந்தச் சட்டத்தின் கீழ் 90 நாட்கள் நீதிமன்றத்தின் விசாரணையோ, அழைப்பாணையோ இன்றி கைது செய்து அடைத்து வைக்க முடியும். தடுப்புக் காலத்தை நீடித்தும் தண்டனை வழங்கக் கூடியதாகவும் இருக்கின்றது.

இது மிக தெட்டத் தெளிவான மனித உரிமை மீறலான செயலாக காணப்படுவதை மனித உரிமை சம்பந்தமாக அறிவுள்ள அனைவரும் புரிந்துகொள்வார்கள் விளங்கிக் கொள்வார்கள்.

இந்த சட்டம் மனித உரிமைகளை அப்பட்டமாக மீறுகின்ற சட்டமாகக் காணப்படுகிறது.எனவே இச்சட்டத்தை இந்த நாட்டிலிருந்து ஆளும்தரப்பு சொல்வதைப் போன்று உடனடியாக இல்லாமல் செய்ய வேண்டும்.

அத்துடன் இச்சட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்ட தமிழ் பேசுகின்ற அனைவருக்கும் இழப்பீட்டினை ஆளும்தரப்பு வழங்கவேண்டும்- என்றார்.

# இரும்புச் சத்தின் முக்கியத்துவம் குறித்து கர்ப்பிணித் தாய்மாருக்கு விழிப்புணர்வு

(ஹலால்தீன்)

இரும்புச்சத்தின் முக்கியத்துவம் குறித்து கர்ப்பிணித் தாய்மார்களுக்கு விளக்கும் விழிப்புணர்வுக் கருத்தரங்கும் கண்காட்சியும் கிண்ணியாவில் இடம்பெற்றது.

பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி அஜித் தலைமையின் கீழ் இந்த நிகழ்வில் கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவை சேர்ந்த சுகாதார மேற்பார்வையாளர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவுகளில் உள்ள பெரிய கிண்ணியா, எகுத்தர் நகர் கர்ப்பிணி தாய்மார்களுக்கு விழிப்புணர்வூட்டும் வகையில் இரும்புசத்து நிறைந்த உணவுவகைகளும் அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. குருதிச் சோகை பற்றியும் விழிப்புணர்வும் வழங்கப்பட்டது.






# சுன்னாகம் சிவபூதராயர் திருக்குடமுழுக்கு விழா

சுன்னாகம் தெற்கு அருள்மிகு ஸ்ரீ சிவபூதராயர் ஆலய திருக்குடமுழுக்குப் பெருவிழா இன்று காலை 9.15 மணி முதல் 10.15 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் நடைபெறவுள்ளது.

ஆலயத் தலைமைக் குரு கிரியாகலா ஜோதி சிவஸ்ரீ சிவசோம தீபதர்சன சிவாச்சாரியார் இந்தத் திருக்குடமுழுக்கை நடத்தி வைப்பார். அன்றையதினம் மாலையில் இறைவன் விசேட திருவீதியுலாவும் வருவார். ஓகஸ்ட் 27 கர்மாரம்பமும், மறுநாள் எண்ணெய்க் காப்பும் இடம்பெறும்.

# புலமைப் பரிசில் கன்னிச் சாதனை மாணவிகள் இருவருக்கு கௌரவம்

(சகாதேவராஜா)

சம்மாந்துறை வலயத்துக்குட்பட்ட 75 வருடகால மல்லிகைத்தீவு அ.த.க. பாடசாலையின் பவளவிழா செவ்வாய்க்கிழமை அதிபர் ஜதீஸ்வராவின் தலைமையில் நடைபெற்றது. கூடவே,வரலாற்றில் முதல் தடவையாக தரம் 5 புலமைப் பரிசில் பரிசையில் சித்தி பெற்ற இரண்டு மாணவிகளும் கௌரவிக்கப்பட்டார்கள்.

உருத்திரமூர்த்தி சபிக்ஷனா என்ற மாணவி 144 புள்ளிகளையும், ராஜு சஞ்ஷனா என்ற மாணவி 146 புள்ளிகளையும் பெற்று வரலாற்றுச் சாதனை படைத்திருந்தனர் .

அவர்களுக்கு, ஆஸ்திரேலியா காரைதீவு ஒன்றிய (ஒஸ்கார் ) அமைப்பின் தலைவர் பத்மநாதன் (ராஜன்) வேண்டுகோளின் பேரில், அதன் ஸ்தாபக தலைவர் பிரபல கட்டடக் கலைஞர் மகேந்திரன் இருபதாயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கினார். அதனை ஒஸ்கார் இலங்கைப் பிரதிநிதி சகாதேவராஜா சாதனை மாணவிகளுக்கு வழங்கி வைத்தார்.

விழாவில் பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் மகேந்திரகுமார், கௌரவ அதிதிகளாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் யசீர் அரபாத், ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் சகாதேவராஜா, முன்னாள் காரைதீவு தவிசாளர் ஜெயசிறில் ஆகியோரும் அயல் பாடசாலை அதிபர்களாக கிருபைராஜா





(கணபதிபுரம்), ஆர்.ஜயசிங்கம் (புது நகரம்) ஆகியோர் கலந்துகொண்டனர்.

பவளவிழா சிறப்புரையை ஆசிரியர் உருத்திரமூர்த்தி நிகழ்த்தினார். சாதனை மாணவிகள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

# வறுமையின் பிடியிலிருக்கும் 5 குடும்பங்களுக்கு வீடுகள்

## திருகோணமலை மக்கள் மன்ற உதவியில்

(ஹஸ்பர்)

வறுமைக்கோட்டின்கீழ்வாழ்கின்ற 5 குடும்பங்களுக்கு நிரந்தரவீடுகள் வங்கப்பட்டுள்ளன. திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தினால் அமைக்கப்பட்ட இந்த வீடுகள் வியாழக்கிழமை பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

போர்ச்சூழல் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக வறுமைக் கோட்டின் கீழ் வாழுகின்ற, அடிப்படை தங்குமிட வசதிகள் இல்லாத குடும்பங்களுக்கு திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தினால் நடப்பாண்டில் 40 நிரந்தர வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படுகின்றன. சிலி நாட்டை தலைமையமாகக் கொண்ட சர்வதேச தொண்டு நிறுவனமான செலவிப் பவுண்டேன் (SELAVIP Foundation) நிறுவனத்தின் நிதி அனுசரணையில் இந்த வீடுகள் நிர்மாணிக்கப் படுகின்றன.

இதில் முதற் கட்டமாக அமைக் கப்பட்ட ஐந்து வீடுகள் பயனாளிகளிடம் கையளிக்கப் பட்டன. திருகோணமலை மக்கள் சேவை மன்றம் கடந்த ஐந்து ஆண்டுகளாக இதுபோன்ற வீடுகளை வறுமைக் கோட்டின் கீழ் வாழுகின்ற மக்களுக்கு வழங்கி வருகின்றது.



தமது அடிப்படைப் பௌதீக வளங்களைப் பூர்த்தி செய்ய முடியாத குடும்பங்களுக்கு மலசலகூடங்கள், குடிதண்ணீர் வசதி ஆகிய உதவிகளையும் மன்றம் வழங்கி வருகின்றது.

மக்கள் சேவை மன்றத்தினால் இது வரை 300 நிரந்தர மற்றும் பாதுகாப்பான வீடுகள் பல்வேறு நிதி அனுசரணையாளர்கள் மூலம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

வியாழக்கிழமை இடம்பெற்ற வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வில் மக்கள் சேவை மன்றத்தின் மூத்த ஆலோசகர் பிரகலநாதன், மன்றத்தின் திட்ட உத்தியோகத்தர் குவைசிர், நிதி நிர்வாக உத்தியோகத்தர் கிரிஸ்ணவேணி, நிறுவனத்தின் தன்னார்வத் தொண்டர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ரணில் விக்கிரமசிங்கவின் கைது பழிவாங்கலா? சட்டத்தின் ஆட்சியா?

இலங்கையின் அரசியல் வரலாற்றில் இதுவரை நிகழாத ஒன்று கடந்த வாரம் நிகழ்ந்தது. முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். ஒரு நிறைவேற்று அதிகாரம் கொண்ட முன்னாள் அரசுத் தலைவரை இவ்வாறு கைது செய்வது இலங்கையில் முதன்முறையாக நிகழ்வதே நாட்டை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. இதுபோன்று ஒரு நாள் வரக்கூடும் என்பதைப் பலர் கற்பனை செய்ததுகூ இல்லை. ஆனால் அது நடந்துவிட்டபோது, அதிர்ச்சி, குழப்பம், சந்தேகம் ஆகியவை ஒன்றாகக் கலந்த உணர்வுகளை மக்களிடையே ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் ஒரே ஒருவரின் கைது என்று மட்டுமே பார்க்கக்கூடாது. இது அரசியல், சட்டம், ஆட்சி நெறி மற்றும் ஜனநாயகத்தின் திசையை மாற்றக்கூடிய புதிய அத்தியாயத்தின் தொடக்கம் என்றும் கருதப்பட வேண்டும். அதற்காகவே, இந்தக் கைது எந்த வகையில் நடத்தப்பட்டது, அது எவ்வாறு பொதுமக்களிடம் விளக்கப்பட்டது, அதன் நோக்கம் என்ன என்பதை ஆளும்தரப்புத் தெளிவுபடுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

இலங்கையின் மக்கள் கடந்த ஆண்டு நடந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தேர்தலில் தேசிய மக்கள் சக்தியிடம் (NPP) முதல் தடவையாக ஆட்சியை ஒப்படைத்தனர். ஆனால் அந்த வாக்கு, அக்கட்சியின் மையக் கூறான ஜேவிபிக்காக (JVP) வழங்கப்பட்டதல்ல. அது, பழைய அரசியல் கலாசாரத்திலிருந்து விலகிய மாற்றத்திற்காக அளிக்கப்பட்டது. எனவே, முன்னாள் அரசுத் தலைவரைக் கைது செய்வது போன்ற முன்னெப்போதும் இல்லாத நடவடிக்கைகள் எடுக்கப்படும்போது, ஆளும்தரப்பு 'சுத்தமான கைகள்' மற்றும் 'சுத்தமான நோக்கம்' என்பதைக் காட்ட வேண்டும். இல்லையெனில் அது பழிவாங்கல் அரசியலாகவே தோன்றும்.

விக்கிரமசிங்கவுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் அவரது அரசுத் தலைவர் பதவியின் அதிகாரப்பூர்வ கடமைகளும், தனிப்பட்ட வாழ்வும் ஒன்றோடொன்று கலந்த நிலையில் உள்ளதனால் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. இங்கே ஆளும்தரப்பு உண்மையான பொறுப்புக் கூறுதலுக்கும், அரசியல் பழிவாங்கலுக்கும் இடையே உள்ள வரம்பைக் குழப்பிவிட்டது. மேலும், சில சமூக ஊடகப் பிரபலங்கள் நீதித்துறையின் தீர்ப்புகளை முன்கூட்டியே கணித்தது போன்ற நிகழ்வுகள் ஆளும்தரப்பின் நடவடிக்கையின் மீதான நம்பிக்கையை மேலும் குறைத்துவிட்டன.

இதேவேளை, கடந்த மூன்று மாதங்களில் பல தேசிய மக்கள் சக்தியின் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் மீதும் முறைகேடுகள், அதிகார துஸ்பிரயோகம் உள்ளிட்ட பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆனால் அவை பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்டுவிட்டன. மற்றொருபுறம், முன்னாள் அரசுத் தலைவரைப் பொது நிதியைத் தவறாக பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்வது மக்களிடம் "தேர்வு செய்யப்பட்ட நீதியா" என்ற கேள்வியை எழுப்புகிறது.

இது ஆளும்தரப்பின் நம்பகத்தன்மையை பாதிக்கக்கூடிய விஷயம். ஏனெனில், ஒருபுறம் தங்களைச் சுற்றி எழும் குற்றச்சாட்டுகளுக்கு மௌனம் காத்துக் கொண்டு, மறுபுறம் எதிரிகளை எதிர்த்து ஊழல் எதிர்ப்பு பரப்புரையை முன்னெடுத்தால், அது சட்டத்தின் சமநீதியை அல்ல, அரசியல் பழிவாங்கலையே காட்டும்.

ரணிலின் கைது, அரசியல் களத்தில் சோர்வடைந்திருந்த எதிர்க்கட்சிக்கு புதிய உயிர் ஊட்டியுடுள்ளது. நீண்டகாலமாக ஜனநாயகப் பொறுப்புகளை முறையாக ஏற்கத் தவறியிருந்த எதிர்க்கட்சி, இப்போது அரசாங்கத்துக்கு எதிராக குரல் கொடுக்கத் தொடங்கியுள்ளது. இது நாட்டின் ஜனநாயகத்திற்கு நல்லது. மக்கள் அளித்த ஆணை ஒரு ஆட்சிமாற்றத்திற்காக அல்ல, ஒரு அமைப்புமாற்றத்திற்காக என்பதைக் கவனத்தில் கொள்வது மிக முக்கியம்.

ரணிலின் கைது இலங்கையில் சட்டத்தின் ஆட்சியை வலுப்படுத்தும் வாய்ப்பாக இருக்கலாம். ஆனால் அது, அரசியல் பழிவாங்கலாகவே தோன்றினால், ஆளும்தரப்பு மக்களிடையே பெற்ற நம்பிக்கையை இழக்க நேரிடும். ஜனநாயக அரசில் சட்டம் அனைவருக்கும் சமமாகப் பயன்படுத்தப்படவேண்டும் என்பதே அடிப்படை. அந்த அடிப்படை குலைந்துவிட்டால், ஆளும்தரப்பின் நெறிமுறைச் சட்டப்பூர்வமும் கேள்விக்குறியாகும்.

இலங்கை தற்போது அரசியல் கலாசாரத்தை முற்றிலும் மாற்றும் சந்திப்பில் நிற்கிறது. முன்னாள் ஜனாதிபதி கைது செய்யப்பட்ட சம்பவம் சட்டத்தின் வெற்றியாகவா? பழிவாங்கலின் விளைவாகவா? என்பது மக்களின் மனதில் எழுந்துள்ள கேள்வி. இதற்கு பதிலளிப்பது ஆளும்தரப்பின் அடுத்தடுத்த நடவடிக்கைகள்தான். தமது சொந்தக் கட்சியினருக்கும் அதே சட்டம் பொருந்தும் என்பதைக் காட்டத் தவறினால், தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு தன்னுடைய வரலாற்று முக்கியமான பொறுப்பை இழக்க நேரிடும்.

மக்கள் ஆளும்தரப்பிடம் எதிர்பார்ப்பது, ஒரு பழைய ஆட்சியை வீழ்த்துவதல்ல. அவர்கள் எதிர்பார்ப்பது, ஒரு புதிய சட்ட ஆட்சி, ஒரு சுத்தமான அரசியல் கலாசாரம், ஒரு வெளிப்படையான ஜனநாயக அமைப்பு. அது நிகழ்ந்தால் மட்டுமே, இந்தக் கைது உண்மையில் நாட்டின் வரலாற்றில் நல்ல திருப்பமாகப் பார்க்கப்படும்.

# பெண் நோயியல் சிகிச்சைப் பிரிவை கிளிநொச்சியில் இயங்க வையுங்கள்

### நோயாளர் நலன்புரிச் சங்கம் கோரிக்கை

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை வளாகத்தில் சுமார் 5 ஆயிரத்து 300 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்ட பெண் நோயியல் வைத்திய சிகிச்சை பிரிவினை உடனடியாக இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நோயாளர் நலன்புரிச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை வளாகத்தில் வெள்ளிக்ககிழமை செய்தியாளர்களைச் சந்தித்த நோயாளர் நலன்புரிச் சங்கத்திர் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தினர்.

நெதர்லாந்து அரசினுடைய நிதியொதுக்கீட்டில் சகல வசதிகளையும் கொண்ட பெண் நோயியல் சிகிச்சைப் பிரிவு திறந்து வைக்கப்பட்டது. இங்கு 160இற்கும் மேற்பட்ட நோயாளர்களுக்கான படுக்கை வசதிகள் உள்ளன. இந்தப் பிரிவிற்கான பணிகள் அனைத்தும் முடிந்து அது வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டுவிட்டபோதும் அந்தப் பிரிவு இன்னும் இயங்கத் தொடங்கவில்லை.

இந்த நிலையில், இந்த பெண் நோயியல் சிகிச்சைப் பிரிவிற்கான சில வைத்திய உபகரணங்களை வேறுவைத்தியசாலைகளுக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் திரை மறைவில் மேற்கொள்ளப்படுவதாக நலன்புரிச் சங்கம் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது.

இது தொடர்பாக சுகாதார உயர் மட்டங்களிலும் பல கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இதற்கு இடமளிக்காமல் கிளிநொச்சியில் பெண் நோயியல் சிகிச்சைப் பிரிவை உடனடியாக இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் நலன்புரிச்சங்கத்தின் தலைவர் விஜயசேகரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி வைத்தியசாலையில் இருந்து உபகரணங்களை வேறு வைத்தியசாலைகளுக்கு மாற்றுவதை எதிர்த்துக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடப்போகிறார்கள் எனவும் அவர் தெரிவித்தார். (316)

# குழந்தை ம.சண்முகலிங்கம் நினைவு பன்னாட்டு பண்பாட்டு ஆய்வு மாநாடு

### யாழ். பல்கலைக்கழகத்தில் ஓகஸ்ட் 31இல்

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம் ( சமூக விஞ்ஞானப் பிரிவு ), செயல் திறன் அரங்க இயக்கம் இணைந்து நடத்தும் குழந்தை சண்முகலிங்கம் நினைவு பன்னாட்டு பண்பாட்டு ஆய்வு மாநாடும் நாடக ஆற்றுகைகளும். நிகழ்வு எதிர்வரும் ஓகஸ்ட் 31 யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ் அரங்கு மற்றும் கலைகளின் சமகால வெளிப்பாடுகள் என்ற தொனிப்பொருளில் மாநாடு நடைபெறவுள்ளது. இதற்கு பிரதான திறப்புரையை வழங்குவதற்காக உலகப் புகழ்பெற்ற தொடர்பியல் துறைப் பேராசிரியர் இரவீந்திரன் இந்தியாவிலிருந்து வருகைதருகிறார்.

நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சற்குணராஜா கலந்து சிறப்பிக்கிறார். கலைப்பீடாதிபதி பேராசியரியர் ரகுராம் சிறப்பு விருந்தினராக பங்கு கொள்கிறார். நிகழ்வு யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் தலைவர் வைத்தியர் டினேஸ் கூன்ஜே தலைமையில் நடைபெறுகின்றது.

ஆய்வுமாநாடு நான்கு முக்கிய பகுதிகளாக நடைபெறவுள்ளது. காலை 9.00 முதல் -10.00 மணி வரை தொடக்கவிழாவும் அரங்கத்திறப்புரையும் நடைபெறும், 10.30 12.30 மணி வரை ஆய்வு அளிக்கைகளும் கலந்துரையாடல்களும் நடைபெறுகின்றன. மாலை 2.00 3.30 மணி வரை குழுநிலைக் கலந்துரையாடல் நடைபெறுகிறது. இதில் ஈழத்தின் தமிழ் நாடகத்தின் எதிர்காலம் என்ற தலைப்பில் கலந்துரையாடல் ஆளுமைகளின் கருத்துரைகள் பேராசிரியர் மௌனகுரு தலைமையில் நடைபெறவுள்ளது.

மாலை 4.00 மணிக்கு குழந்தை சண்முகலிங்கத்தின் சிறுவர் நாடகங்களான பஞ்சவர்ண நரியார், கூடிவிளையாடு பாப்பா போன்ற நாடகங்கள் மேடையேறுகின்றன. இவற்றை செயல் திறன் அரங்க இயக்கம் தயாரித்து வழங்குகின்றது. அவற்றைத் தொடர்ந்து குழந்தை சண்முகலிங்கத்தின் புகழ்பெற்ற நாடகமான எந்தையும் தாயும் நாடகம் மேடையேறுகின்றது. இதனை மலையகத்திலிருந்து 'தியேட்டர் மேட்ஸ்' நாடகக்குழுவினர் மேடையேற்றுகின்றார்கள்.

ஈழத்து நவீன தமிழ் நாடகப்புலத்தில் பேராளுமையாகத் திகழ்ந்த குழந்தை சண்முகலிங்கத்தின் இந்த நினைவு நிகழ்வு நாடகர்கள், நாடகச் செயற்பாட்டாளர்கள், மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ள நிகழ்வாக அமைந்திருக்கும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.



காலைக்கதிர்
Kalaikkathir

# ரஷ்யா ஏன் அலாஸ்காவை அமெரிக்காவிற்கு விற்றது?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

அலாஸ்காவில் தங்கம், மரம் மற்றும் பெட்ரோலியம் உள்ளிட்ட ஏராளமான வளங்கள் இருந்தன. ஆனாலும் 1867இல் அமெரிக்காவிற்கு மிக குறைந்த விலையில் ரஷ்யா விற்றது. இதன் பின்னர் 1959 இல் அலாஸ்கா 49வது மாநிலமாக மாறியது.

மிகப் பெரும் பொருளாதார நெருக்கடியை 1867 இல் ரஷ்யா சந்தித்ததால், அலாஸ்காவை அமெரிக்காவிற்கு விற்க வேண்டிய கட்டாயத்தில் இருந்தது. ஆனால் சோவியத் சகாப்தத்தில் இது ஒரு அவமானமாகக் கருதப்பட்டது என்று முன்னாள் கிரெம்ளின் அதிகாரிகள் தெரிவித்தனர்.




## டிரம்ப்- புடின் உச்சி மாநாடு:






ரஷ்யாவின் ஜனாதிபதி விளாடிமிர் புடின் வெள்ளிக்கிழமை அலாஸ்காவில் ஜனாதிபதி டிரம்பை சந்தித்து உக்ரைனில் நடந்த போரை நிறுத்துவது குறித்து விவாதித்தார். சமாதானப் பேச்சுவார்த்தைகளின் ஒரு பகுதியாக உக்ரேனிய நிலப் பரிமாற்றம் பற்றியும் அவர்கள் பேசினர்.

வரலாற்று ரீதியாக 18ம் நூற்றாண்டில் காலனித்துவ விரிவாக்கத்தின் போது ரஷ்யா அலாஸ்காவைக் கைப்பற்றியது. ஆனால் ரஷ்ய பேரரசு எதிர்பார்த்த நோக்கங்கள் எதுவுமே அலாஸ்காவில் நிறைவேறவில்லை. இருப்பினும் ரஷ்யர்கள் அமெரிக்காவை தங்களின் ஒரு குடியேற்ற நாடாக மாற்ற எண்ணியே அலாஸ்காவில் கால் பதித்தார்கள்.

ஆனால் அன்றைய ரஷ்ய தலைநகர் செய்ண்ட் பீட்டர்ஸ்பர்க்கிலிருந்து அவ்வளவு தூரத்தில் அவ்வளவு குளிரில் தனிமையில் வாழ ஒரு ரஷ்யரும் விரும்பவில்லை. அவர்களுடைய அதிக பட்ச சனத்தொகை அலாஸ்காவில் ஒரு போதும் ஆயிரத்தை தாண்டவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் ரஷ்யர்கள் தெற்கில் கலிஃபோர்னியாவில் செயுன் றொஸ் கோட்டை என்று ஒன்றைத் தேர்ந்தெடுத்து உருவாக்கினார்கள். 1812க்குப் பின்னால் அதனைக்கூடப் பேணும் ஆவல் அவர்களுக்கு இருக்கவில்லை. அதையுமேஸ்பெயினுக்கு நட்டத்தில் விற்றுக் காசக்கிக் கொண்டார்கள்.

## கிரிமியா தோல்வி:

1991 இல் கிரிமியா ஒரு சுதந்திர உக்ரைனின் ஒரு பகுதியாக மாறியது. மேலும் 2022 இல் உக்ரைன் மீதான முழு அளவிலான படையெடுப்பின் முன்னோட்டமாக ரஷ்யா அதை 2014 இல் கைப்பற்றியது அறிந்ததே.

ரஷ்யர்கள் தம்முடைய உயிர்நாடியாக கருதிய கிரிமியாவில் பிரித்தானியர்களிடம் கடுமையாகத் தோற்றது மட்டுமல்லாமல் அந்த யுத்தத்துக்காகப் பட்டகடனையே அடைக்க வழியில்லாமல் திணறிக் கொண்டிருந்தார்கள்.

இதேவேளை ரஷ்யர்களுக்கு இன்னொன்றும் புரிந்தது. வெற்றிருசிகண்ட பிரிட்டன் கனடாவிலிருந்து அவர்களை அலாஸ்காவில் தாக்கினால் அவர்களால் ஒரு சில நாட்கள் கூடத்தாக்குப் பிடிக்கமுடியாது என்பதாகும்.

பிரிட்டனுக்கு அப்படி ஒரு எண்ணம் இருப்பதாகவும், தங்களை அலாஸ்காவில் தாக்குவது நிஜம் என்றும் அவர்கள் எண்ணினார்கள். மேலும் யுத்தக்கடன் சுமையும் ரஷ்யர்களை மேலும் வாட்டியது.

இதனால் அலாஸ்காவை அமெரிக்காவுக்கு விற்றுவிட்டால் அவர்களுக்கு மூன்று இலக்குக்கள் வெற்றியாக கிடைத்து விடும் என்று ரஷ்யா எண்ணியது. மேலும்

உள்ளூர்வாசிகளின் வெறுப்புக்கு உள்ளாகி இருந்த ரஷ்யர்கள் அலாஸ்காவை விட்டு வெளியேறினால் நன்றாக இருக்கும் என்றே எண்ணினார்கள்.

மேலும் பணம் வந்தால் கடனை அடைக்கலாம். ஆசியாவில் தம்மை நிலைப்படுத்தலாம். அது மிக முக்கியம் என்றும், அலாஸ்காவை பிரிட்டனுக்கு இல்லையென்று ஆக்குவது என்றும் முடிவு செய்யப்பட்டது.



இறுதியாக ஏக்கருக்கு 7.5 சதங்கள் விலையில் அமெரிக்க அன்ட்ரூ ஜக்சனின் அரசாங்கத்துக்கு மொத்தம் 7.2 மில்லியன் டாலர்களுக்கு அலாஸ்காவை விற்றார்கள்.

அதன் இன்றைய பெறுமானம் 113 பில்லியன் டொலர்கள் எனலாம்.

## ரஷ்யப் பேரரசின் காலனித்துவம்:

1783 இல் ரஷ்யப் பேரரசு கேத்தரின் தி கிரேட் காலத்தில் இணைக்கப்பட்ட ஒரு தீபகற்பமான கிரிமியாவில் நடந்த போரின் காரணமாகவே ரஷ்யா அலாஸ்காவை விற்கத் தூண்டப்பட்டது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

7.2 மில்லியன் டொலர்களுக்கு அலாஸ்காவை அப்போது வாங்கியது அமெரிக்காவிற்கு மிகவும் நல்ல பலனை அளித்தது. இந்த பணம் அந்த நேரத்தில் ரஷ்யப் பேரரசுக்கு இது அர்த்தமுள்ளதாக இருந்தாலும், சில ரஷ்ய தேசியவாதிகள் இந்த விற்பனையை ஒரு வரலாற்றுத் தவறு என்று கருதுகிறார்கள்.

ஆசியாவையும் வட அமெரிக்காவையும் பிரிக்கும் நீரிணையைக் கடந்து 18 ஆம் நூற்றாண்டில் ரஷ்ய ஆய்வாளர்கள் அலாஸ்காவை அடைந்தனர். புதிய ரஷ்ய பிரதேசத்தை உரிமை கோருவதற்காக 1720 களில் ஜார் பீட்டர் தி கிரேட் அனுப்பிய டேனிஷ் வம்சாவளியைச் சேர்ந்த மாலுமி விட்டஸ் பெரிங்கின் பெயரால் இந்த நீரிணை பெயரிடப்பட்டது.

அக்காலத்தில் சீனாவில் ஒரு மதிப்புமிக்க பொருளாக இருந்த கடல் நீர்நாய் உரோமங்களை அறுவடை செய்ய ஆரம்பகால ரஷ்ய ஆய்வாளர்கள் விரைந்ததால், அலூடியன் தீவுகளிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் பழங்குடி மக்களுக்கு எதிராக ஒரு உணர்வு இருந்ததாக நம்பப்படுகிறது.

ரஷ்யாவின் மீதான அலாஸ்காவின் பொருளாதார ஈர்ப்பு காலப்போக்கில் மங்கிப்போனது.1799 ஆம் ஆண்டில், ரஷ்யப் பேரரசு ரஷ்ய-அமெரிக்க நிறுவன வர்த்தகத்தை நெறிப்படுத்தவும், பின்னர் அலாஸ்கா பிரதேசத்தில் ரஷ்ய குடியேற்றங்களை உருவாக்கவும் முயன்றது.

ரஷ்ய அமெரிக்கா குடியேற்றம் கலிபோர்னியா




வரை தெற்கே நீண்டிருக்கும் என்று கருதப்படுகிறது.

சிட்கா - அலாஸ்கா, 1892இல் இந்த குடியேற்றம் ரஷ்ய காலனித்துவ நிர்வாகி அலெக்சாண்டர் பரனோவ் என்பவரால் நிறுவப்பட்டது.

## அலாஸ்காவை வைத்திருப்பதில் சவால்கள்

அலாஸ்காவை வைத்திருப்பதில் உள்ள சவால்கள் மற்ற கண்டங்களில் ஏற்பட்ட முன்னேற்றங்களால் சிக்கலானவை என ரஷ்யா கருதியது. ரஷ்யா அதன் தூர கிழக்கில் காலனித்திய விரிவாக்கத்தில் கவனம் செலுத்த விரும்பியது.

1853 இல் கிரிமியாவில் பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் ஒட்டோமான் பேரரசுடன் ரஷ்யா போரிடத் தொடங்கியபோது, பிரிட்டிஷ் படைகள் வட அமெரிக்கா வழியாக ரஷ்ய தூர கிழக்கை ஆக்கிரமிக்க முயற்சிக்கக்கூடும் என்று ரஷ்ய அதிகாரிகள் கவலைப்பட்டனர்.

அந்த அச்சுறுத்தல் தணிந்த பிறகும், பசிபிக் பகுதியில் பிரிட்டிஷ் இருப்பு குறித்து அவர்கள் தொடர்ந்து கவலைப்பட்டனர்.

## அலாஸ்காவை அமெரிக்க வாங்கியது

இதன் காரணமாக மார்ச் 1867 இல், அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் வில்லியம் ஹென்றி செவார்ட், இந்த பிரதேசத்திற்கு ×5 மில்லியன் வழங்குவதன் மூலம் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கினார்.

இரண்டு வாரங்களுக்குப் பிறகு, அவர்கள் ×7.2 மில்லியன் என ஒப்புக்கொண்டனர். ஆனால்

சில ரஷ்யர்களுக்கு இந்த விற்பனையால் அதிருப்தி ஏற்பட்டது.

ரஷ்ய அதிகாரத்தை உக்ரைனில் மீட்டெடுக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றி அடிக்கடி பேசும் திரு. புடின், 2014 இல் ரஷ்யா அலாஸ்காவை இணைக்கத் திட்டமிட்டுள்ளதா என்று கேட்டபோது தெளிவற்ற முறையில் கூறினார்.

2022 இல் உக்ரைன் படையெடுப்பிற்குப் பிறகு ரஷ்யாவில் 'அலாஸ்கா எங்களுடையது' என்ற விளம்பரப் பலகைகள் பலவும் தோன்றின. மேலும் சில அரசியல்வாதிகள் மற்றும் தொலைக்காட்சி நிபுணர்களால் இந்த செய்தி பெருக்கப்பட்டது. தற்போது அலாஸ்காவில் டிரம்ப்-புடின் உச்சிமாநாட்டை நடத்துவது தீவிர வலதுசாரி ரஷ்ய தேசியவாதிகளுக்கு கிடைத்த வெற்றியாகும் என்றும் மேற்குலக ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# சந்நிதி கொடியேறியது

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தின் வருடாந்த கொடியேற்ற திருவிழா நேற்று ஆயிரக்கணக்கான பக்தர்களுடன் பக்திபூர்வமாகத் தொடங்கியது. நேற்று மதியம் கொடியேற்றப்பட்டது.

அன்னதான கந்தன் என்று அழைக்கப்படும் சன்னதியானின் திருவிழாவில் அதிகளவான பக்தர்கள் முதல் நாளிலே கலந்து கொண்டு காவடி எடுத்தும் பால் செம்பு எடுத்தும் நேர்த்திக் கடன்களை நிறைவு செய்தனர்.

பதினாறு நாட்கள் இடம்பெறும் சன்நிதி முருகன் திருவிழாவில், தேர் உற்சவம் செப்ரெம்பர் 06, தீர்த்தத்திருவிழா செப்ரெம்பர் 07 இடம்பெறும். அன்றைய தினம் மாலை 6.00 மணிக்கு மௌனத் திருவிழாவும் இடம்பெறவுள்ளமை ஆலயத்தின் சிறப்பம்சமாகும்.

அமாவாசை அற்றுப்போகும் நேரத்தில் சன்நிதியானின் கொடியேற்றப்படும். அவ்வேளை கந்தனின் அற்புதத்தால் வள்ளிக்கொடி தோன்றும். இதனையே கொடி ஏற்ற திருவிழா இன்று பக்தர்கள் கொண்டாடுவர்.

ஆகமம் சாராத பக்திசார் வழிபாட்டு மையமாக இருக்கும் தொண்டைமானாறு செல்வச்சந்நிதியின் கொடியேற்ற நிகழ்வு ஏனைய ஆலயக் கொடியேற்ற நிகழ்வுகளில் இருந்து வேறுபட்டதாகும்.

ஆவணி மாத பூர்வபக்க பிரதமை கூடும் நேரத்தில் இங்கு கொடியேற்றம் இடம்பெறுவது வழமை. அந்த வகையில் வாக்கிய பஞ்சாங்கத்தின் பிரகாரம் இன்று 23.08.2025 பகல்மாலை 12.24 இற்கு அமாவாசை அற்றுப் போனதால் பிற்பகல் 1.22 மணியளவில் சந்நிதியானின் கொடியேற்றம் நிகழ்ந்தது.

வைரவப் பெருமானுக்குக் காப்புக் கட்டிப் பின்னர் பிள்ளையார் பூசை மூலவரான வேலவருக்குப் பூசை இடம்பெற்றதைத் தொடர்ந்து கொடியேற்றத்தின் முக்கிய நிகழ்வான கேடகப் பூசை இடம்பெற்றது.

ஆலய வாயிலில் மூலஸ்தானத்தை நோக்கியவாறு உள்ள நந்திக்கு (இடபத்திற்கு) முன்பாக கேடகம் வைக்கப்பட்டிருக்கும். ( கேடகம் என்பது சுவாமியைக் காவிச்செல்லும் கூடு) கேடகத்தின் உச்சியில் உள்ள கலசத்தில் தருப்பை, ஏழு மாவிலைகள் என்பவற்றைப் பட்டுத் துண்டால் கட்டி பூசை இடம்பெற்றது. இதனைக் கலச பூசை என்கின்றனர். இதுவே கொடியேற்றத்தின் முக்கிய நிகழ்வாகும்.

கொடியேற்றம் நிகழ்ந்ததன் அறிகுறியாக ஆலய வாயிலில் சேவல் கொடி பறக்கவிடப்பட்டது. அதன்பின் எழுந்தருளி வேலவருக்குப் பூசை இடம்பெற்றதும் அவரை கேடகத்தில் எழுந்தருளச் செய்து உள்வீதியுலா வரச் செய்தனர்.

வள்ளி அம்மன் வாசலுக்கு எழுந்தருளி வேலவர் வந்ததும் அவரை வள்ளி அம்மன் கோவிலுக்குக் கொண்டு சென்று தீர்த்தக் குளத்தில் நீர் எடுத்து வேலவருக்கும் வள்ளி அம்மைக்கும் விசேட பூசை இடம்பெற்றது.

ஆவணி மாத பூர்வபக்க பிரதமை கூடும் நேரத்தில் இங்கு கொடியேற்றம் இடம்பெறுவது வழமை. அந்த வகையில் வாக்கிய பஞ்சாங்கத்தின் பிரகாரம் இன்று 23.08.2025 பகல்மாலை 12.24 இற்கு அமாவாசை அற்றுப் போனதால் பிற்பகல் 1.19 மணியளவில் சந்நிதியானின் கொடியேற்றம் நிகழ்ந்தது.

சந்நிதி முருகன் ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு விசேட போக்குவரத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பாதுகாப்பு கடமையில் குடிசார் உடையிலும், சீருடையிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்

இதேவேளை நாளாந்தம் பசித்தோர்க்கும், வறுமையிலுள்ளோர்க்கும் அறப்பணி ஆற்றிவரும் சந்நிதியான் ஆச்சிரமத்திலும் விசேட பஜனை வழிபாடுகளுடன் சிறப்பு பூசைகளும் இடம் பெற்று ஆச்சிரமத்திலும் கொடி ஏற்றப்பட்டு சிறப்பு பூசைகள் இடம் பெற்றதுடன் நாளாந்த திருவிழாக்காலத்தில் பல்வேறு ஆன்மீக நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

# பொருளை வாங்கிவிட்டு பணம் செலுத்தாத இளைஞர் ஒருவர் சம்மாந்துறையில் கைது

(இல்சாத் பர்வீஸ்)

இணையம் மூலம் ரூபாய் 45000 பெறுமதியான பொருளை கொள்வனவு செய்து அதனைப் பெற்றுக்கொண்ட பின்னர் பணத்தைச் செலுத்தாமல் வழங்காமல் தப்பியோடிய இளைஞரைச் சம்மாந்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறநகர் பகுதியில் இணையம் மூலம் கொள்வனவு செய்த இளைஞர் ஒருவர் பொருளைப் பெற்றுக்கொண்டு அதற்குரிய பணத்தை வழங்காது தப்பிஓடி விட்டார் என்று புதன்கிழமை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் சம்மாந்துறை 01 பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞரைப் பொலிஸார் கைது செய்தனர். அவரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட பொருள் மீட்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

# கணினி உபகரணங்கள் கையளிப்பு

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கு வியாழக்கிழமை வருகை தந்த கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திசாநாயக்க பிராந்தியத்தில் உள்ள சில வைத்தியசாலைகளுக்கு கணினி உள்ளிட்ட உபகரணங்களை வழங்கி வைத்தார்.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சகீலாவின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் சிரேஷ்ட உதவி செயலாளர் கரன், நிர்வாக உத்தியோகத்தர் றியாஸ், பிராந்திய பிரிவு தலைவர்கள், வைத்தியசாலைகளின் பொறுப்பு வைத்திய அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project

இது ஒரு
கற்பகவனம்
செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

# சுகாதாரக் குறைபாடுகளுடன் இயங்கிய உணவகத்திற்கு ரூ. 40 ஆயிரம் தண்டம்

பருத்தித்துறை நகரசபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள உணவகம் ஒன்றிற்கு எதிராக பருத்தித்துறை நகரசபையின் பொது சுகாதார பரிசோதகரால் உடல்நலத்தகுதியை உறுதிப்படுத்தும் மருத்துவ சான்றிதழ் இல்லாமல் ஊழியர்களை உணவகத்தில் அனுமதித்தமை, தனிநபர் சுகாதாரம் பேணாமை, வெற்றிலை மென்ற வண்ணம் உணவினை கையாண்டமை தொடர்பாக முகாமையாளர் மற்றும் உணவு கையாளுபவரிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கானது வெள்ளிக்கிழமை விசாரணையின் பின் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தினால் 40000 தண்டப்பணம் விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும், பருத்தித்துறை நகர்ப்புறத்தில் அமைந்துள்ள மீன்சந்தையில் மீன்வியாபாரம் செய்யும் போது வெற்றிலை மென்று பொதுவிடத்தில் எச்சில் உமிழ்ந்தவருக்கு 5000 தண்டப்பணமும் அறவிடப்பட்டது.

வல்வெட்டித்துறை நகரசபையின் ஆளுகைக்குட்பட்ட தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்துள்ள உணவகம் ஒன்றிற்கு எதிராக வல்வெட்டித்துறை நகரசபையின் பொது சுகாதார பரிசோதகரால் உடல்நலத்தகுதியை உறுதிப்படுத்தும் மருத்துவ சான்றிதழ் இல்லாமல் ஊழியர்களை உணவகத்தில் அனுமதித்தமை, உணவகத்தில் கடமைபுரியும் ஊழியர்கள் தனிநபர் சுகாதாரம் பேணாமை, இலையான் பெருக இடமளித்தமை, குடிப்பதற்கும் சுத்திகரிப்பிற்கும் பயன்படும் நீரானது குடிக்கத்தக்கது என உறுதி செய்யத் தவறியமை, உணவகத்தினை வதிவிடமாக பயன்படுத்தியமை, போன்ற குற்றச்சாட்டுகளிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் 25000 தண்டம் விதிக்கப்பட்டது.

# பனைசார் கைப்பணி பயிற்சியாளர்களிற்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும், கண்காட்சியும்



பனைசார் கைப்பணி பயிற்சியாளர்களிற் கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் சரஸ்வதி மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

பனை அபிவிருத்தி சபைத் தலைவர் ரவீந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக கடற்றொழில் மற்றும் நீரியல் கடல்வளங்கள் அமைச்சர் சந்திரசேகரன் கலந்துகொண்டார்.

இதன்போது, அமைச்சர் சந்திரசேகர் பனைசார் கைப்பணி பயிற்சியாளர்களிற்கான சான்றிதழ் வழங்கி வைத்ததோடு, கைப்பணிப் பொருட்களின் கண்காட்சியையும் பார்வையிட்டார்.

# கருத்து முரண்பாடு கத்திக்குத்தில் முடிவு சுண்டிக்குளத்தில் ஒருவர் பரிதாபச் சாவு

## மற்றொருவர் படுகாயம்

வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளம் பகுதியில் உள்ள மீனவ வாடியில் இருந்தவர்களுக்கிடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு கத்தி வெட்டில் முடிந்ததில் ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமடைந்தார்.

வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற சம்பவத்தில் செங்கலடி மட்டக்களப்பை சேர்ந்த சின்னத்தம்பி வடிவேல் (வயது- 48) என்பவர் நெஞ்சு பகுதியில் கத்திக் குத்திற்கு இலக்கான நிலையில் உயிரிழந்தார்.

அதே பகுதியை சேர்ந்த சைத்தான் மகேஸ்வரன் (வயது- 41) என்பவர் படுகாயம் அடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்துக்கு சென்ற கிளிநொச்சி பதில்நீதிவான்சடலத்தைவைத்தியசாலையில் ஒப்படைத்து உடறல்கூறாய்வு மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார். உயிரிழந்தவரைக் கத்தியால் குத்தினார் என்ற சந்தேகத்தில் உடப்பு பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய சந்தேகநபர் மருதங்கேணிப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# ரணில் ஊழலுக்காகவே கைது அதில் பழிவாங்கல் ஏதுமில்லை

## ஜெகதீஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு






முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அவர் செய்த ஊழலுக்காக கைது செய்யப்பட்டுள்ளாரே தவிர அதில் எந்தவிதமான அரசியல் பின்னணிகளும் பழிவாங்கல்களும் அதில் கிடையாது என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின் செய்தியாளர்களிடம் பேசியபோதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஊழல் மோசடிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம் என்று தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் அறிக்கையிலேயே கூறப்பட்டிருந்தது.

அந்தவகையில் முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அவர் செய்த ஊழலுக்காக கைது செய்யப்பட்டுள்ளாரே தவிர அதில் எந்தவிதமான அரசியல் பின்னணிகளும் பழிவாங்கல்களும் அதில் கிடையாது.

நீதியான முறையில் விசாரணைகள் இடம்பெற்றுசாட்சியங்களின்அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். அரசுத் தலைவருக்கும் சாதாரண மக்களுக்கும் இலங்கையில் நீதி ஒன்றுதான் என்பதை மக்கள் உணர்ந்துள்ளனர்.

இந்த கைதானது நாட்டு மக்களுக்கு ஒரு செய்தியைக் கூறிநிக்கின்றது. தேசிய மக்கள் சக்தி அரசில் யார் ஊழல் மோசடிகளில் ஈடுபடுகின்றார்களோ, ஈடுபட்டார்களோ அவர்கள் எந்தவித தராதரமும் பார்க்கப்படாமல் நீதியின் முன் நிறுத்தப்படுவார்கள் என்பதற்கு இந்த கைதினை உதாரணமாக கொள்ளலாம் - என்றார்.

## அரசியல்வாதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளோம்.அரசியல்வாதி ஒருவர் சிறைக்கு செல்லாவிடின் அவரது அரசியல் பயணம் முழுமையடையாது.முன்னாள்அரசுத்தலைவர் ரணில் விக்கிரசிங்க கைது செய்யப்பட்டமை குறித்துக் கவலையடைகிறோம். அவரைப் பாதுகாப்பதற்கு ஜனநாயக ரீதியில் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

அரசியல் என்ற நிலையில் வேறுபாடுகள் இருக்கலாம்ஆனால்நெருக்கடியானநிலையில் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். நாட்டின் சட்டவாட்சி மற்றும் ஜனநாயகத்தை முன்னிலைப்படுத்தியவகையில்ஆளும்தரப்பு செயற்படவேண்டும்.ஜனநாயகத்தைபாதுகாக்க வேண்டுமாயின் அரசமைப்புக்கு அமைய ஆளும்தரப்பு செயற்படவேண்டும் என்றார்

## அரச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முழுவதும் மருத்துவர்கள் பணி நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவார்கள் என்று முன்னதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்திருந்தது. அமைச்சருடனான நேற்றைய சந்திப்பின் பின்னர் அதனைக் கைவிட்டுள்ளது.

## சட்டத்தின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆளும்தரப்பின் அரசமைப்புடனான சர்வாதிகாரத்தை தோற்கடிக்க அரசியல்,கட்சி பேதமின்றிய வகையில் அனைவரும் ஒன்றுப்படவேண்டும். அத்துடன் ஜனாதிபதிகளுக்கான சிறப்புரிமைகளை இரத்துச் செய்தார்.

2022 ஆம் ஆண்டு நாடு வங்குரோத்து நிலையடைந்திருந்தபோது தனிமனிதனாக சவால்களை பொறுப்பேற்று நாட்டைக் குறுகிய காலத்தில் மீட்டெடுத்தார். அந்த கௌரவத்தை அவருக்கு வழங்க வேண்டும். வெளிநாட்டு கையிருப்பை அதிகரித்துக் கொண்டுள்ளோம் என்று மார் தட்டிக்கொள்ளும் சூழலை இந்த ஆளும்தரப்புக்குரணில்விக்கிரமசிங்கவேதான் ஏற்படுத்திக் கொடுத்தார் என்பதை மறந்துவிடக் கூடாது.

அமைச்சு மட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள ஊழல் எதிர்ப்பு குழு ஊடாகவே முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்தக் குழுவில் ஜேவிபி உறுப்பினர்கள்தான் உள்ளார்கள். பத்தரமுல்லகட்சிஅலுவலகத்தின் உறுப்பினர்கள் குழுவின் உறுப்பினர்களாக அரசுத் தலைவரால் நியமிக்கப்பட்டார்கள்.

பத்தரமுல்ல கட்சி அலுவலகத்தில் இந்த கண்காணிப்பை ‘பி.ஆர்‘என்பவர்தான் வழிநடத்தியுள்ளார்.ஆகவே இது அரசியல் பழிவாங்களின் முழு வடிவத்தையும் வெளிப்படுத்துகிறது.

சுதத எனும் யூடியுபரின் செயற்பாடு நீதித்துறைக்கு விடுத்த கடும் அச்சுறுத்தலாகும். முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்படுவதற்கு முன்னர் இந்த நபர் ‘ரணில் விக்கிரமசிங்க 14 நாட்கள் சிறை செல்வார், அவ்வாறு நடக்காவிடின்தான்யூடியூபர்தொழிற்றுறையில் இருந்து விலகுவேன்‘ என்று குறிப்பிட்டுள்ளார். இவர் ஜேவிபிக்காகவே செயற்படுகிறார்.

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதைஎதிர்க்கட்சிகளின்உறுப்பினர்களுக்கு மாத்திரம்அரசுத்தலைவர் வரையறுத்துள்ளார். இந்த ஆளும்தரப்பின் அமைச்சர்கள் மற்றும் பிரதிஅமைச்சர்கள்மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு சட்டத்தால் விலக்களிக்கப்பட்டுள்ளது. இது முற்றிலும் முறையற்றதொரு செயற்பாடு - என்றார்.

## ஜனநாயகம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டமை இந்நாட்டின்ஜனநாயகமதிப்பின்மீதுதிட்டமிட்ட வகையில் மேற்கொண்ட தாக்குதலாகும்.இது விசேடமானதொரு நிலையாகும்.நாட்டின் அடிப்படை ஜனநாயக நிறுவனங்களின் பலம் தொடர்பில் பாரியதொரு கவலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையால் ஏற்படும் எதிர்விளைவுகள் தனி நபரையோ அல்லது அரசியல் கட்சிகளுக்கு செல்வாக்கு செலுத்துவதை காட்டிலும் அதற்கு அப்பாற்பட்ட வகையில் ஒட்டுமொத்த சமூக கட்டமைப்பின் உரிமைகளுக்கும் அச்சுறுத்தலாக அமையும்.

இவ்வாறான செயற்பாடுகளுக்கு சகல அரசியல் தலைவர்களும் எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும். ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு பலமான எதிர்ப்பை வெளிப்படுத்துகிறேன் - என்றுள்ளது.

## ஆளும்தரப்பின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற எதிர்க்கட்சிகளின் செய்தியாளர்கள் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் ஜனாதிபதிகளை பழிவாங்கும் நோக்கில் வெறுப்புக்களை மாத்திரம் முன்னிலைப்படுத்தி அரசுத் தலைவர் அநுரகுமார செயற்படுகிறார். முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை கைது செய்வதற்கு ஆளும்தரப்பு முறையான நடவடிக்கைகளை மேற்கொண்டதா என்பதில் பெரும் சந்தேகம் காணப்படுகிறது.

பொலிஸ் சேவையில் இருந்து ஓய்வுப்பெற்று பின்னர் ஜேவிபியுடன் ஒன்றிணைந்து செயற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் அமைச்சரவையின் அனுமதியுடன்மீண்டும்பொலிஸ்சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டார். இந்த நபரின் தேவைக்காகவே முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் கொள்கை தொடர்பில் எம்மிடம் மாறுப்பட்ட நிலைப்பாடு இருக்கலாம். இருப்பினும் ஜனநாயகத்துக்கு எதிரான செயற்பாடுகள் தலைதூக்கும் போது அதற்கு அனைவரும் ஒன்றிணைந்துஎதிர்ப்புதெரிவிக்கவேண்டும். ஜனநாயகத்தை பாதுகாக்கவே நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்துள்ளோம்.

6 மாத காலத்துக்குள் நாட்டை முன்னேற்றுவதாக மக்களுக்கு வாக்குறுதியளித்து ஆட்சிக்கு வந்த ஆளும்தரப்புமக்களுக்குவழங்கியஅடிப்படை வாக்குறுதிகளை மறந்துவிட்டு அரசியல் பழிவாங்கலை மாத்திரம் முன்னிலைப்படுத்தி செயற்படுகிறது. ஆளும்தரப்பின் குறைகளை சுட்டிக்காட்டுபவர்களைமுடக்கிசர்வாதிகாரமான முறையில் ஆட்;சியியலை முன்னெடுப்பதற்கு ஆளும்தரப்பு முயற்சிக்கிறது.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டதை வன்மையாக கண்டிக்கிறோம். முன்னாள் அரசுத்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நேர்ந்த கதி நாளை பிறிதொருவருக்கு ஏற்படலாம்.ஆகவே சர்வாதிகாரத்துக்கு எதிராக அனைவரும்அணிதிரளவேண்டும்-என்றார்.



# ரணிலின் கைது தவறென்று சுமந்திரன் கூறுவது அமைச்சர் பிமலுக்கு கவலை

## யாழ்ப்பாணத்தில் அவரே சொன்னார்

ரணில் விக்கிரமசிங்க கைதுசெய்யப் பட்டமை தவறு என சுமந்திரன் கூறுவது கவலை அளிக்கின்றது. அவர் யாழ்ப்பாணத்தில் இருந்து பேசுகின்றாரா அல்லது ரணிலின் வீட்டில் இருந்து பேசுகின்றாரா என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க கேள்வி எழுப்பினார்.

யாழ்ப்பாணத்திலுள்ள தேசிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

படுகொலைகள் உட்பட பலசம்பவங்களுக்குப் பொறுப்பு கூறவேண்டிய நபர்தான் ரணில் விக்கிரமசிங்க. மத்திய வங்கி பிணைமுறி மோசடி குற்றச்சாட்டும் உள்ளது. இப்படிபட்ட நபரைப் பாதுகாக்கும் விததத்தில் கருத்து வெளியிடுவது கவலையளிக்கின்றது.

இந்த நாட்டில் சட்டம் என்பது அனைவருக்கும் சமம். பலம் பொருந்தியவர்களுக்கு எதிராகச் சட்டம் செயற்படாது என்ற நிலை மாற்றப்பட்டுள்ளது. ரணில் விக்கிரமசிங்க மட்டும் அல்ல எப்படியான நபரும் சட்டத்துக்குக் கட்டுப்பட்டே செயற்படவேண்டும்;. இதுவிடயத்தில் எவருக்கும் விதி விலக்கல்ல.

அதேவேளை, இந்தியாவில் இருந்து நாடு திரும்பும் இலங்கை அகதிகளுக்கு உரிய ஏற்பாடுகளை செய்துகொடுப்பதற்கு நாம் தயாராகவே இருக்கின்றோம்.

ஜனாதிபதி அநுர ஆட்சிக்கு வந்து எதிர்வரும் செப்டம்பர் 21 ஒரு வருடமாகின்றது. இதனை முன்னிட்டு முதலாம் திகதியில் இருந்து அபிவிருத்தி திட்டங்கள் தொடங்குகின்றன. வடக்கில் இருந்துதான் அதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளோம் -- என்றார்.

# சைக்கிளில் சென்றவரை மோதித் தள்ளிய ஹன்ரர்

## முதியவர் பரிதாபச் சாவு

வவுனியா கனகராயன்குளம் கொல்லர் புளியங்குளம் பகுதியில் இன்று இடம்பெற்ற விபத்தில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கி பயணித்துக் கொண்டிருந்த ஹன்ரர் ரக வாகனம் கொல்லர்புளியங்குளம் பகுதியில் சென்று கொண்டிருந்த போது எதிரே துவிச்சக்கர வண்டியில் (சைக்கிள்) பயணித்த நபரை மோதியது. இந்தவிபத்தில் துவிச்சக்கரவண்டியில் பயணித்த நபர் படுகாயமடைந்த நிலையில் மாங்குளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும் அவர் சிகிச்சைபயனின்றி உயிரிழந்தார்.

சம்பவத்தில் அதே பகுதியைச் சேர்ந்த முத்து ராமலிங்கம் (வயது 61) என்ற முதியவரே உயிரிழந் தார். விபத்து தொடர்பாக கனகராயன்குளம் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.




# ரணில் மீது சட்டம் பாய்ந்துள்ளதால் ராஜபக்சக்கள் ஆட்டம் கண்டுள்ளனர்

## கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன் பெருமிதம்

ரணில் விக்கிரமசிங்கவை நெருங்க முடியாது, அவர் மீது கை வைக்க முடியாது, அவர் சர்வதேச இராஜந்திரம் தெரிந்தவர், நரித்தனமானவர், அவரோடு விளையாட முற்படவேண்டாம் என எதிரணியினர் கூறி வந்தனர். இந்நிலையில் அவர்மீது சட்டம் பாய்ந்துள்ளதால் ராஜபக்சக்கள் ஆட்டம் கண்டுள்ளனர் என்று கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்தார்.

ரணிலுக்கு நடந்தது போல் வடக்கில் உள்ள அரசியல்வாதிகள் வாழ்விலும் “வசந்தம்“ பிறக்கும் - என்றும் அவர் எச்சரித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டுக்கு தீங்கு, இழப்பு ஏற்படுத்தியது ரணிலா, ராஜபக்சவா என்பது எமக்கு முக்கியம் அல்ல. எவராக இருந்தாலும் ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராகச் சட்டம் தனக்குரிய கடமையை செய்யும்.

இன்னும் ஒரு சில வாரங்களில் வடக்கில் உள்ள அரசியல்வாதிகள் வாழ்விலும் வசந்தம் பிறக்கும் என நினைக்கின்றோம்.

மக்களுக்குச் சொந்தமான அனைத்துக் காணிகளும் விடுவிக்கப்படும். இந்த நிலைப்பாட்டில் ஜனாதிபதி உறுதியாக இருக்கின்றார். தையிட்டி விகாரைப் பிரச்சினையும் தீர்க்கப்படும். வடக்குக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் முதலீடுகள் தொடர்பில் சில அதிகாரிகள் இழுத்தடிப்பு செய்து வருகின்றனர். அவர்கள் பற்றியும் எமக்கு தெரியும். அவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும். - என்றார்.



# ரணிலை சிறையிட்டால்தான் நித்திரை வரும் என்றவர்களே இப்போது அவருக்கு ஆதரவு

## ஜேவிபி செயலாளர் ரில்வின் சில்வா சாடல்

முன்னாள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக இன்று கைகோர்த்துள்ள எதிர்க்கட்சிகள்தான் கடந்த காலங்களில் 'ரணிலை சிறைக்கு அனுப்பினால்தான் உறக்கம் வரும்' என்றார்கள். நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைவாகவே ரணில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். நீதிமன்றத்தின் உத்தரவை சவாலுக்குட்படுத்தி போராட்டத்தில் ஈடுபட்டால் அது நீதிமன்ற அவமதிப்பாகும் என ஜேவிபியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச நிதி மோசடி குற்றச்சாட்டின் அடிப்படையில் முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றப்புலனாய்வு திணைக்களத்தால்கைது செய்யப்பட்டுநீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார். நீதிமன்றத்தில் இருதரப்பிலும் விடயங்கள் முன்வைக்கப்பட்டன.

முன்னாள்அரசுத்தலைவர்ரணில்விக்கிரமசிங்கவுக்கு பிணையளிப்பதற்கு போதுமான காரணிகள் இல்லாததால் அவரது பிணை கோரிக்கை நிராகரிக்கப்பட்டு நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.இன்று நீதிமன்றம் குறித்து மாறுப்பட்ட கருத்துக்களை குறிப்பிடுபவர்கள், ரணில் விக்கிரமசிங்கவுக்கு பிணை கிடைத்திருந்தால் நீதிமன்றத்தை புகழ்வார்கள்.

ரணில்விக்கிரமசிங்கவைகைது செய்தவுடன்தேர்தல் காலத்தில்முட்டிமோதிக்கொண்டவர்கள் அணைவரும் ஒன்றிணைந்துள்ளார்கள். இவர்களில் 99 சதவீதமானோர் சட்டத்தால் தண்டிக்கப்பட வேண்டியவர்கள்.தமது குற்றங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்ற அச்சத்தில்தான் இவர்கள் முன்னெச்சரிக்கையாக ஒன்றிணைந்துள்ளார்கள். இவர்களின் கூட்டிணைவு எமக்கு சவாலல்ல,



ரணிலை சிறைக்கு அனுப்பினால் தான் உறக்கம் வரும்' என்று கடந்த காலங்களில் தேர்தல் மேடைகளில் குரல் எழுப்பியவர்கள் தான் இன்று அவருக்காக ஒன்றிணைந்துள்ளார்கள்.நாட்டு மக்கள் முதலில் உண்மையை விளங்கிக் கொள்ள வேண்டும்.

சிறு குற்றங்களுக்கு தண்டபணம் செலுத்த முடியாமல் எத்தனை பேர் இன்றும் சிறையில் உள்ளார்கள். அதிகாரத்தில் இருந்தவர்கள் செய்யும் தவறுகளை பெரிதுப்படுத்த கூடாது என்று முன்னாள் அரசுத்தலைவர் ஒருவர் குறிப்பிடுகிறார்.அவ்வாறாயின் அவரது ஆட்சியில் எவ்வாறு சட்டவாட்சி செயற்படுத்தப்பட்டிருக்கும் என்பதை மக்கள் ஆராய வேண்டும்.

அதிகாரத்தில் இருந்தவர்கள் மற்றும் அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க கூடாது என்றால் சட்டத்தின் மீது மக்களுக்கு எவ்வாறு நம்பிக்கை தோற்றம் பெறும். எவ்வாறு சட்டவாட்சியை உறுதிப்படுத்துவது.ரணிலுக்கு ஆதரவு தெரிவித்து நாளை கொழும்புக்கு ஒரு தரப்பினர் வருவதாக குறிப்பிடப்படுகிறது. பேச்சு மற்றும் கருத்து சுதந்திரத்துக்கு அனைவருக்கும் உரிமையுண்டு. நீதிமன்றத்தின் உத்தரவை சவாலுக்குட்படுத்தி போராட்டத்தில் ஈடுபட்டால் அது நீதிமன்ற அவமதிப்பாகும் என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# ரணிலின் பிணை நிராகரிப்பை எதிர்ப்போர் நீதிமன்றில் வாதங்களை முன்வைக்கலாம்

## அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் பிணை கோரிக்கை நிராகரிக்கப்பட்டமை தவறென்று குறிப்பிடுபவர்கள் நீதிமன்றத்தில் விடயங்களை முன்வைக்கலாம். 166 இலட்சம் அரச நிதியை சாதாரண நபர் ஒருவர் முறைகேடாக பயன்படுத்தியிருந்தால் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படமாட்டாதா, ரணில் விக்கிரமசிங்க தொடர்பில் மேலதிக தகவல்கள் தேவையாயின் இன்று அவருக்கு ஆதரவாக ஒன்றிணைந்துள்ளவர்கள் கடந்த காலங்களில் ரணில் விக்கிரமசிங்க தொடர்பில் குறிப்பிட்ட விடயங்களை மீண்டும் கேட்கலாம். சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளை மக்கள் இனியேனும் விளங்கிக்கொள்ள வேண்டும் என சுகாதாரம் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

தபால் தொழிற்சங்கத்தினருடன் நேற்று ஊடகத்துறை அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலின்பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

குற்றப்புலனாய்வுத் திணைக்களம் கடந்த காலங்களில் மேற்கொண்ட விசாரணைகளுக்கு அமைவாக நீதிமன்றத்துக்கு விடயங்கள் அறிக்கையிடப் பட்டன. நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைவாகவே கைதுகள் இடம்பெறுகின்றன. இவ்வாறே முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவை விளக்கமறியலில் வைத்துள்ளமை தவறென்று குறிப்பிடுபவர்கள் நீதிமன்றத்தில் தவறு என்பதற்கான விடயங்களை எடுத்துரைக்கலாம்.நாமல் ராஜபக்ஷ, தயாசிறி ஜயசேகர,நிமல் சிறிபாலடி சில்வா ஆகியோர் தானும் சட்டத்தரணி தான் என்று குறிப்பிட்டுக் கொண்டு நீதிமன்றத்தின் முன்பாக ஊடகங்களுக்கு குறிப்பிடும் விடயங்களை நீதிமன்றத்துக்குள் சென்று குறிப்பிடலாம்.

முன்னாள் ரணில் விக்கிரமசிங்கவின் பிணை கோரிக்கை நிராகரிக்கப்பட்டமை தவறென்பதை நீதிமன்றத்தில் குறிப்பிடலாம் அதனை விடுத்து ஊடகங்களில் குறிப்பிடுவதால் பலனேதுமில்லை.

எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்துள்ளன. இவர்களின் அச்சம் நியாயமானதே,அரச நிதி மோசடி,ஊழல்,கொலை, கொள்ளை, கப்பல், சட்டவிரோத செயல்களுடன் தாம் எந்தளவுக்கு தொடர்புப்பட்டுள்ளோம் என்பதை அவர்கள் நன்கு அறிவார்கள்.விசாரணையாளர்கள் சொற்ப விடயங்களையே அறிவார்கள்.

அதிகாரத்தின் முன்பாக சட்டம் தலைகுனியாது என்பதை மக்கள் தற்போது விளங்கிக்கொண்டுள்ளார்கள். நீதிமன்றத்தின் மீதான மக்களின் நம்பிக்கை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பது வலுவாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

166 இலட்சம் ரூபாவை சாதாரண நபர் ஒருவர் முறைகேடாக பயன்படுத்தியிருந்தால் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படமாட்டாதா,ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக இன்று அனைவரும் ஒன்றிணைந்துள்ளார்கள்.இவர்கள் ஒரு குழையின் தேங்காய்களை போன்றவர்கள்.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தொடர்பில் மேலதிக தகவல்கள் தேவையாயின் இன்று அவருக்கு ஆதரவாக ஒன்றிணைந்துள்ளவர்கள் கடந்த காலங்களில் ரணில் விக்கிரமசிங்க தொடர்பில் குறிப்பிட்ட விடயங்களைமீண்டும் கேட்கலாம்.நீதிமன்றத்தின் ஊடாகவே சகல நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன ஆகவே போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதில்பயனில்லை என்பதை எதிர்க்கட்சிகள் விளங்கிக் கொள்ள வேண்டும் என்றார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.08.2025இல் வெளியிடப்பெற்றது